018395

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
தபால்
13 ஆக 2002

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – கல்வித் தகுதிகள் – சென்னை பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் வங்கி மேலாண்மையியலில் இளங்கலை பட்டப்படிப்பை (பி. பி. எம்) இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளில் ஒன்றான பி. காம். பட்டப்படிப்பிற்கு .இணையாக அங்கீகரித்து ஆணை வெளியிடப்படுகின்றன.

நிதி (கூட்டுறவு தணிக்கைத் )துறை

அரசாணை (நிலை) எண் 281 நாள் 8.8.2002

23 ந் தேதி, ஆடி,சித்ரபானு
திருவள்ளுவராண்டு 2033

படிக்கப்பட்டவை

1) கூட்டுறவு தணிக்கை இயக்குநரின் கடித எண் ந க 2563./ 01/நேஉ3, நாள் 30.3.2001.

2) தேர்வாணைய கடித எண் 8577/ RND-F –1/2001/நாள் 11.6.2002 .

-----

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட முதல் கடிதத்தில் சென்னை பல்கலை கழகத்தால் வழங்கப்படும் பி.பி.எம். பட்டப்படிப்பு இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளில் ஒன்றான பி.காம். பட்டப்படிப்பிற்கு இணையானதாக கருதலாமா என கூட்டுறவு தணிக்கை இயக்குநர் அரசிடம் தெளிவுரை கோரி கருத்துரு அனுப்பியுள்ளார்.

2/– பி.பி.எம். பட்டப்படிப்பை பி.காம். பட்டப்படிப்பிற்கு இணையாக அங்கீகரிப்பதற்கு பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அரசாணை நிலை எண் 441 (பணி – ஆர்) நாள் 20.12.93ல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட கல்வித் தகுதி இணை அங்கீகரிப்பு குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு அந்தக் குழுவும் 4.6.2002 அன்று நடந்த குழு கூட்டத்தில் சென்னைப் பல்கலை கழகத்தால் வழங்கப்படும் பி.பி.எம் பட்டப்படிப்பை இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளில் ஒன்றான பி.காம். பட்டப்படிப்பிற்கு இணையாக கருதலாம் என்று தேர்வாணயத்தின் பரிந்துரைக் குழு பார்வை 2–ல் கண்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

68

3/– குழுவின் பரிந்துரையை அரசு தீவிர பரிசீலனைக்குபின் ஏற்று கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே சென்னை பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பி.பி.எம். பட்டப்படிப்பு இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளில் ஒன்றான பி.காம். பட்டப்படிப்பிற்கு இணையான கல்வித் தகுதியாக கருதலாம் என ஆணையிடுகிறது.

4./– இது குறித்து தற்காலிக விதிகளில் தகுந்த விதி திருத்தம் வெளியிட பிரேரணை தனியாக அரசுக்கு அனுப்பிவைக்குமாறு கூட்டுறவு தணிக்கை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

என். நாராயணன்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
கூட்டுறவு தணிக்கை இயக்குநர்,
சென்னை–5

நகல்:
செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை–2
பதிவாளர்,
சென்னை பல்கலைக் கழகம்
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர் & இ) துறை,
சென்னை–9
முதலமைச்சர் அலுவலகம்,
தலைமைச் செயலகம்,
சென்னை–9
கூட்டுறவு உணவு (மற்றும்) நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
சென்னை–9
கூட்டுறவு சங்கப் பதிவாளர்,
சென்னை.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்